தமிழ் நாடு வனத்துறை

அனுப்புநர்

திரு. கௌதம் டே, இவப.,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(வனத்துறைத் தலைவர்),
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

பெறுநர்

ஆணையர்,
நகர் மற்றும் ஊரமைப்பு,
நெ.807, அண்ணா சாலை,
சென்னை 600 002.

மூ. மு. எண். ட்டி.எஸ்.4/38603/2013 நாள். 31.10.2013.

அய்யா,

பொருள்: மலைதள பாதுகாப்பு குழுமம் - நீலகிரிமாவட்டம் - உதகை வட்டம் - உதகை ஊரக கிராமம் - புல எண். 629, 630/2ஏ1, 2பி, 2சி, 2டி, 2இ மற்றும் 2 எஃப் - கட்டிடங்கள் கட்ட வனத்துறையின் தடையின்மை சான்று கோரியது - தொடர்பாக.

பார்வை: தலைவர், தொட்டபெட்டா ஊராட்சி, ஆடாசோலை கடிதம் எண். இல்லை, நாள். 04.06.2012.

******

பார்வையில் கண்ட கடிதத்தில் நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகை ஊரக கிராமம் புல எண். 629, 630/2ஏ1, 2பி, 2சி,2டி,2இ மற்றும் 2எஃப்-ல் உள்ள நிலத்தில் 19941.96 ச.மீ பரப்பளவில் கட்டிடங்கள் (காட்டேஜ், பணியாளர்கள் குடியிருப்பு முதலியன) கட்ட M/s. Total Environment Habitat Pvt. Ltd., விண்ணப்பித்ததின் பேரில் அதன் மீதான வனத்துறை நோக்கிலான தடையின்மை சான்றை தொட்டபெட்டா ஊராட்சி தலைவர் நீலகிரி வடக்கு கோட்ட மாவட்ட வன அலுவலரிடம் கோரியுள்ளார்.

2. இந்நேர்வில் தொட்டபெட்டா ஊராட்சி எல்லைக்குட்பட்ட உதகை வட்டம்/உதகை ஊரக கிராமம் காலை எண். 629, 630/2ஏ1, 2பி, 2சி,2டி,2இ மற்றும் 2எஃப் ஆகிய காலைகளுக்கு அருகே உள்ள காப்புக்காடு பகுதியிலிருந்து 150 மீட்டர் தொலைவிற்குள் கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது என்ற நிபந்தனையின் பேரிலும் மற்றும் வனத்திற்கும் வன உயிரினங்களுக்கும் எவ்வித தொந்தரவும் தீங்கும் ஏற்படா வண்ணம் நடைமுறையிலுள்ள வனச்சட்டங்கள் மற்றும் வன உயிரின சட்டங்கள் ஆகியவைகளுக்கு உட்பட்டு கட்டிடங்கள் வேலை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நிபந்தனை பேரிலும் வனத்துறை நோக்கிலான "மறுப்பின்மை சான்று" வழங்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

பா. ஹேமாவதி
31.10.13

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(வனத்துறைத் தலைவர்)க்காக

31/10/2013